## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 111/2020 | Date : 11.07.2023 | PW1 |
|---|---|---|
| Name: மாதம்மாள் | W/o.மணி | |
| Evidence Recorded Time: 12.16 P.M. to 12.50 P.M | | |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதிகளை படித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் வீட்டு பிரச்சனைக்காக தாக்கல் செய்துள்ளேன். வீட்டினை விற்பதாக கூறி, வீட்டின் மேல் பணம் வாங்கினார் அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எவ்வளவு விலைக்கு வீட்டை விற்பதாக பிரதிவாதி கூறினார் என்றால் ரூபாய் ஏழு லட்சத்திற்கு விற்பதாக கூறி, ரூபாய் ஆறு லட்சத்தை முன்பணமாக பெற்றுக்கொண்டார், மீதி கிரைய ஒப்பந்த தொகையை பத்திர பதிவின் போது பெற்றுக்கொள்வதாக கூறினார். பிரதிவாதி தனது சொத்தை விற்பதாக கிரைய ஒப்பந்த பத்திரம் போடவில்லை என்றாலும், பிரதிவாதி என்னிடம் பெற்ற கடன் தொகை ரூபாய் லட்சத்திற்கு ஈடாக சொத்தினை கேட்டதால் வீட்டினை வைத்து கடன் பெற்றார் என்றாலும் சரியல்ல. எந்த தேதியில் சொத்தை விற்பதாக ஒப்பந்த பத்திரம் போடப்பட்டது என்றால் 14.02.2019 ம் தேதியில் ஒப்பந்த பத்திரம் போடப்பட்டது. மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரம் ஒரு வருட காலத்திற்கு போடப்பட்டது. 14.02.2019 ம் தேதியில் போடப்பட்ட கிரைய ஒப்பந்தம் 13.02.2020-ம் தேதி காலக்கெடு முடிவதால் நான் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை, வீட்டில் சென்று பிரதிவாதியை கேட்டேன். 13.02.2020-ம் தேதி மீதி கிரைய தொகையை செலுத்த காலம் முடிந்ததால் அறிவிப்பு அனுப்பாமல் பிரதிவாதியிடம் சொத்தை எழுதி தரக்கேட்டேனா என்றால் கேட்டேன். அவ்வாறு எந்த தேதியில் கேட்டேன் என்றால் 13.02.2020-ற்கு முன்பு கேட்டேன். நான் சென்று கேட்டபோது பிரதிவாதி என்னிடம் என்ன சொன்னார் என்றால் வீட்டில் ஆட்கள் குடியிருக்கிறார்கள் என்றும், கொரனா காலகட்டமாக இருப்பதால் ஐந்தாறு மாதங்கள் கழித்து பார்த்து கொள்ளலாம் என்று கூறினார். கொரனா காலத்தில் எந்த அரசு அலுவலகங்களும் இயங்காத காரணத்தினால்

நான் பிரதிவாதி ஐந்தாறு மாதங்கள் கழித்து கிரையம் செய்து கொள்ளலாம் என்று கூறியதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 14.02.2019–ம் தேதி பிரதிவாதி தனது சொத்தை அடமானம் வைத்து ரூபாய் ஆறு லட்சம் கடனாக பெற்றார் என்றாலும், அந்த கடன் தொகைக்கு மாதம் ரூபாய் 3.50 வீதம் மாதம் ரூபாய் 21,000/– வட்டி பெற்றேன் என்றாலும் சரியல்ல, நான் வீட்டினை விற்பதாக சொன்னதால்தான் கிரைய முன்பணம் கொடுத்தேன். நான் வட்டிக்கு பணம் கொடுத்தற்கு நானும், பிரதிவாதியும் பேசிய ஆடியோ பதிவுகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், அந்த பதிவில் வட்டி இன்னும் கொடுக்க வில்லை என்று நான் கேட்டேன் என்றாலும் சரியல்ல. மேற்படி ஆடியோ பதிவில் உள்ள குரலையும், என்னுடைய குரலையும் நிபுணருக்கு அனுப்பி ஆய்வு செய்ய எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. கொரனா காலத்தில் ஒவ்வொரு மாதமும் ரூபாய் 21,000/– வட்டி பணம் செலுத்தி வந்தார் என்றாலும், கடைசி மாதம் பிரதிவாதி வட்டி செலுத்ததால்தான் நான் வீட்டிற்கு சென்று வட்டி கேட்டேன் என்றாலும் சரியல்ல, நான் வட்டி கேட்கவில்லை, வட்டிக்கு பணமும் கொடுக்கவில்லை. நான் தொடர்ந்து வட்டி கொடுக்கவேண்டும் என்று தொந்தரவு செய்ததால் பிரதிவாதி இனி தொந்தரவு செய்யவேண்டாம் என்றும், கிரைய ஒப்பந்த காலகெடு முடிந்தவுடன் பிரதிவாதி அறிவிப்பு அனுப்பினார் என்றாலும், அந்த அறிவிப்பில் பிரதிவாதி தான் வாங்கிய கடனை அசலுடன், வட்டியையும் சேர்த்து தருவதாக கூறினார் என்றால் அறிவிப்பு அனுப்பவில்லை. 20.06.2020–ம் தேதியில் பிரதிவாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றாலும் அதனை நான் 23.06.2020–ம் தேதி நான் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டையை பிரதிவாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல, அவ்வாறு எனக்கு எந்த அறிவிப்பு வரவில்லை. பிரதிவாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டு நான் 07.07.2020–ம் தேதியில் ஒரு பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் இல்லை. அந்த பதில் அறிவிப்பில் 13.02.2020–ம் தேதி வாய்தா முடிவடைவதால் பிரதிவாதி என்னை பார்த்து ஐந்து மாத கிரைய ஒப்பந்தத்தை கால நீட்டிப்பு செய்து கொள்ளலாம் என்று கேட்கவில்லை என்றால் கேட்டார். ஐந்து மாத கால அவகாசம் எழுதிக்கொடுத்தாரா என்றால் இல்லை வாய் மொழியாகத்தான் சொன்னார். நான் அனுப்பிய அறிவிப்பில்

பதிவு செய்யப்பட்ட விற்கிரைய ஒப்பந்தத்தின் பின்பகுதியில் மேல் எழுத்தாக ஐந்தாறு மாதங்கள் கால நீட்டிப்பு செய்து கொள்ளலாம் என்று கையெழுத்து போட்டுக்கொடுத்தாரா போட்டுக்கொடுத்தார். கிரைய ஒப்பந்தத்தின் பின் பகுதியில் உள்ள மேலெழுத்தை பிரதிவாதி ராம்வேல்தான் எழுதினாரா என்றால் அவர் கையெழுத்து உள்ளதால் அவர்தான் எழுதியிருப்பார். கிரைய ஒப்பந்தத்தின் பின் பகுதியில் பிரதிவாதி எந்த கையெழுத்தும் போடவில்லை என்றாலும் அதை நாங்களாகவே பிரதிவாதி ஐம்பதாயிரம் பெற்றுக்கொண்டதாக குறிப்பிட்டு பிரதிவாதியின் கையெழுத்தை மோசடியாக போட்டுக்கொண்டோம் என்றால் சரியல்ல. பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தத்தை கால நீட்டிப்பு செய்வதாக இருந்தால் அதை ரத்து செய்துவிட்டு புதிதாகத்தான் ஒரு கிரைய ஒப்பந்தம் எழுத முடியுமே தவிர கிரைய ஒப்பந்தத்தின் பின் பக்கத்தில் எந்த குறிப்பு எழுத முடியாது என்றால் சரியல்ல. எனக்கும், பிரதிவாதிக்கும் பணம் கொடுக்கல், வாங்கல் சம்மந்தமாக பிரச்சனை இருக்கும் சமயம் 13.02.2020-ல் பிரதிவாதி என்னை சந்தித்து மேற்கொண்டு ஐம்பதாயிரம் கேட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. விற்கிரைய ஒப்பந்த பத்திரத்தில் உள்ள கையெழுத்தும், பின் குறிப்பில் உள்ள கையெழுத்தும் வேறுபாடு உள்ளது என்றும், அதனை சோதிக்க நிபுணருக்கு அனுப்ப எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. கிரைய ஒப்பந்தத்தின் பின் பக்கம் உள்ள பின் குறிப்பை எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் பிரதிவாதியின் வீட்டில் வைத்து தான் எழுதிக்கொடுத்திருப்பார். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் பிரதிவாதி ஐம்பதாயிரம் பெற்றுக்கொண்டு காலநீடிப்பு செய்த விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒம்/-PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.